# சூழல் பாதுகாப்பு அனுமதி பத்திரம் வழங்குதல்

சில தொழிற்சாலைகள் அல்லது செயற்பாடுகளால் சூழலுக்கு ஏற்படுகின்ற விளைவுகளை கட்டுப்படுத்துவதற்கு சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டு, அதற்கு அமைய அந்த செயல்களை மேற்கொள்ள வேண்டும் என்பதை தேசிய சூழல் சட்டத்தில் ஒழுங்குமுறைகள் உள்ளன.

சூழல் பாதுகாப்பு அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்வது எவ்வாறு?

## சூழல் பாதுகாப்பு அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்வது எவ்வாறு?

- உங்களின் தொழிற்சாலை அல்லது செயற்பாடுகளுக்காக சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் சபையின் இணையத்தளத்தின் ஊடாக அல்லது சேவை கருமபீடம் ஊடாக விண்ணப்பப்படிவம் ஒன்றை பெற்றுக்கொண்டு அதை சரியாக பூர்த்தி செய்யுங்கள்.
- பூர்த்திச்செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தேவையான ஏனைய ஆவணங்களோடு, முன்கூட்டிய கட்டணத்தோடு சேவை கருமபீடத்திற்கு வழங்குங்கள்.

  நீங்கள் செலுத்தப்பட்ட பணத்திற்கான பற்றுச்சீட்டையும், பின் தொடர்இலக்கம் ஒன்றையும் உங்களுக்கு சேவை கருமபீடத்தால் வழங்கப்படும்.
- உங்களின் விண்ணப்பத்தை பெற்றுக்கொண்ட சந்தர்ப்பத்திலேயே, அதை சூழல் சம்பந்தமான
  பொறுப்பதிகாரிக்கு வழங்கப்படும். சூழல் சம்பந்தப்பட்ட அதிகாரியால் உங்களின் கோரிக்கையை ஆய்வுக் குழுக்கு முன்வைத்த பின் இடத்தை மேற்பார்வை செய்வதற்கான திகதியை உங்களுக்கு தெரிவிப்பார்கள்.
- விண்ணப்பம் கிடைத்து 7 நாட்களுக்குள் இடத்தை பார்வையிட்டு, தேவையான கண்காணிப்புகள் மற்றும் பரிந்துரைகளை ஆய்வுக்குழுவினால் மாநகர ஆணையாளர் அல்லது செயலாளருக்கு முன்வைக்கப்படும்.
- அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதையும் அனுமதி பத்திரத்தை வழங்க அனுமதித்திருந்தால், மாநகர ஆணையாளர்அல்லது செயலாளரால் சூழல் அனுமதி பத்திரத்தை வழங்க உத்தரவு வழங்கப்படும்.
- சம்பந்தப்பட்ட பொறுப்பதிகாரியால் சூழல் பாதுகாப்பு அனுமதி பத்திரத்தை தயாரித்து மேயர் அல்லது தவிசாளரின் ஒப்பத்தை பெற முன்வைக்கப்படும்.
- தயாரிக்கப்பட்ட சூழல் பாதுகாப்பு அனுமதி பத்திரத்துக்கு மேயர் அல்லது தவிசாளரால் கையொப்பம் வைக்கப்படும்.
- கையொப்பமிட்ட சூழல் பாதுகாப்பு அனுமதி பத்திரத்தை சம்பந்தப்பட்ட அதிகாரியால் சேவை கருமபீடத்துக்கு முன்வைக்கப்படும்.
- ஒப்பமிட்ட சூழல்பாதுகாப்பு அனுமதி பத்திரத்தை விண்ணப்பதாரிக்கு தபால் மூலம் அல்லது கையில் பெற்றுக்கொள்ளும் வண்ணம் தெரிவிக்கப்படும்.

## சூழல் பாதுகாப்பு செயற்குழுவினால் உங்கள் கோரிக்கையை அனுமதிக்காத சந்தர்ப்பத்தில் என்ன செய்வது?

- நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்களை உங்களுக்கு தெரிவிக்கப்படும்.
- நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்களை சரி செய்து மீண்டும் அவதானம் செலுத்துமாறு கூற உங்களுக்கு வாய்புள்ளது.
- குறைகளை சரி செய்து அதை மீண்டும் முன்வைத்த பின், அனுமதி பத்திரத்தை வெளியிடுவதற்காக மேற்குறிப்பிட்ட படிமுறைகளை மீண்டும் பின்பற்றப்படும்.

## சூழல் அனுமதிப்பத்திரம் வழங்குதல் நிராகரிக்கப்பட்டால் என்ன செய்வது?

- சூழல் அனுமதிப்பத்திரம் வழங்கல் நிராகரிக்கப்பட்டது தொடர்பாக உங்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்படும்.
- அனுமதிப்பத்திரம் வழங்கல் நிராகரிக்கப்பட்டது தொடர்பாக கடிதம் கிடைத்து 30 நாட்கள் செல்வதற்கு முன் சுற்றாடல் அமைச்சின் செயலாளருக்கு மேல்முறை செய்வதற்கு உங்களுக்கு வாய்ப்பு உள்ளது.
- மேல்முறையீடு தனக்கு கிடைத்து ஏழு நாட்களுக்குள் அது தொடர்பாக தனது முடிவை சூழல் அமைச்சின் செயலாளரால் உங்களுக்கு தெரிவிக்கப்படும்.

## அந்த முடிவு எவ்வாறாக இருக்கும்?
## அது இறுதி முடிவாகும்.

Funded by European Union

STRIDE CDLG Capacity Development of Local Governments

